செய்தி வெளியீடு எண்:128 நாள்:19.2.2008

## தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம், தலைமை அலுவலகம், சென்னை-10

## சிமெண்ட் விற்பனை அறிவிப்பு

தமிழக அரசு 1000 சதுரஅடி வரை வீடு கட்டும் ஏழை மற்றும் நடுத்தர குடும்பங்களுக்கு அதிகபட்சமாக அனுமதிக்கப்பட்டிருந்த 200 மூட்டை சிமெண்ட் என்பதை உயர்த்தி, 400 மூட்டை வரை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் பெற்றுக்கொள்ளலாம்.

பழுது பார்த்தல் மற்றும் பராமரிப்பு பணிகளுக்காக ஏழை மற்றும் நடுத்தர மக்களின் தேவையை பூர்த்தி செய்ய 25 மூட்டை வரை, விண்ணப்பங்களின் அடிப்படையில் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளில் மூட்டை ரூபாய் 200/-க்கு விற்பனை செய்யப்படும்.

50 மூட்டைகள் வரை வாங்கும்பொழுது வரைவு காசோலைக்கு பதிலாக நேரடியாக கிடங்கில் பணம் செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

1000 சதுரஅடிக்கு மேல் வீடுகட்டுபவர்களின் நலனை கருதி வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள சிமெண்டினை சென்னை மற்றும் தூத்துக்குடி கிடங்குகளிலிருந்து மூட்டை ரூபாய் 220/-க்கு நிபந்தனையற்ற முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

இது சம்பந்தமாக அருகிலுள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர்களை, கிட்டங்கி பொறுப்பாளர்களை தொடர்பு கொண்டு பயன்பெறும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மேலாண்மை இயக்குநர்

மேலும் விபரங்களுக்கு: **பொது மேலாளர்(விற்பனை)**
**தொலைபேசி எண்: 26425493**
**செல்லிடப்பேசி: 94440 82448**

$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$$

**வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9.**